சென்னை கிழக்கு மாவட்ட துறைமுகம் தொகுதி பகுதி வட்டம் மறுசீரமைப்பு தொடர்பான நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் சென்னை பிரகாசம் சாலை, அன்னை தெரேசா பார்ட்டி ஹாலில் 09.09.2026 புதன்கிழமை காலை 9 மணி அளவில் நடைபெற்றது. கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பகுதி வட்டம் மறு சீரமைப்பு பற்றி எடுத்துக் கூறி ஆலோசனைகள் வழங்கினார் இக்கூட்டத்தில் பகுதி செயலாளர்கள் எஸ். ராஜசேகர்,எஸ். முரளி,ஜி.எம்.தேவன், ,எம். விஜயகுமார் பி ஸ்ரீராமுலு,என் பி எம் ஷேக் அப்துல்லா,இப்ராஹிம் கனி,இரா.கலைச்செல்வி,நா.ரஞ்சித் விஜயாலயன்,பி.விஜயகுமார்,எல்.சம்பத்குமார்,எம்.விநாயகம், வட்டக் கழக செயலாளர்கள் ஆ.நா. பார்த்திபன்,கே கவியரசு எல் சத்யநாராயணன், எஸ் புகழேந்தி,ஆர் ஏ அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா,எம்.பரத்குமார்,,மா. ஜெய்சங்கர்,,பா. கதிரவன் ஆர். ரவிச்சந்திரன், ஜி.ராம்மூர்த்தி,பா.அண்ணாதுரை,டி.சதீஷ்குமார்,வே.பா.பிரபாகரன் , லண்டன் க முருகன், மற்றும் கழக நிர்வாகிகள் செயல் வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை கிழக்கு மாவட்டம்

அம்பத்தூர் வில்லிவாக்கம், கொளத்தூர் திரு.வி.க. நகர் ஆகிய தொகுதிகளின் வட்டம் - பகுதி வரையறை தொடர்பான தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்கள்!

மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

ஆகஸ்ட் 22, சென்னை அறிவாலயத்தில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தின் முடிவின் படி சென்னை கிழக்கு மாவட்டக் கழக ஆலோசனை கூட்டம் 05/09/26 சனிக்கிழமையன்று தலைமைக் கழக பிரதிநிதிகள் பேரா.ஜெ. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., மற்றும் ஆஸ்டின் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலின்படி கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக வட்டம்பகுதி வரையறை தொடர்பான தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெறும் விவரம்

நாள்/நேரம்	தொகுதி	இடம்	முன்னிலை
10.09.2026 வியாழக்கிழமை காலை 11 மணி	அம்பத்தூர் தொகுதி	கிரண் பேலஸ் கொரட்டூர்	ஜோசப் சாமுவேல், டிஎஸ்பி ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், அம்பத்தூர் வடக்கு-தெற்கு-கிழக்கு பகுதி செயலாளர்கள்
10.09.2026 வியாழக்கிழமை மாலை 5 மணி	வில்லிவாக்கம் தொகுதி	வன்னியர் சத்திரம் மேட்டு தெரு அயனாவரம்	வே.வாசு, கூ.பீ.ஜெயின் வில்லிவாக்கம் கிழக்கு-மேற்கு பகுதி செயலாளர்கள்
11.09.2026 வெள்ளிக்கிழமை காலை 10 மணி	கொளத்தூர் தொகுதி	பட்மேடு நாடார் சமூக ஐக்கிய சங்கம் ஜம்புலிங்கம் மெயின் ரோடு ஜி கே எம் காலனி செ - 82	ஐ.சி.எப்.வ.முரளிதரன் எ.நாகராஜன். கொளத்தூர் கிழக்கு மேற்கு பகுதி செயலாளர்கள்
11.09.2026 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி	திரு.வி.க.நகர் தொகுதி	எஸ்.ஆர்.பேலஸ். ஓட்டேரி	செ.தமிழ்வேந்தன், எம் சாமி கண்ணு திரு.வி.க. நகர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்

மேற்கண்ட கலந்தாய்வுக் கூட்டங்களில், அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பகுதிக்கழக நிர்வாகிகள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : பகுதி-வட்டம் மறுசீரமைப்பு குறித்து.

பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

தமிழ்நாடு முதலமைச்சரின் சட்டமன்ற உரை!

சட்டமன்றத்தின் மரபுக்கும், மாண்புக்கும் ஏற்றதல்ல!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப்.10-

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு சட்டப் பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடரில், காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதில் அளித்துப் பேச மூன்று நாள் அவகாசம் எடுத்துக் கொண்ட முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்கள், கடந்த திங்கள் (7.9.2026) அன்று தனது பதிலுரையின் போது, எதிர்க்கட்சிகள் கேட்டிருந்த எந்தக் கேள்விக்கும் பதில் அளிக்காமல், கடந்த 120 நாட்களாகத் தமது தலைமையில் நடந்து வந்த ஆட்சியின் போது நடைபெற்ற சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்துப் பல கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்கு எதுவும் தெரிவிக்காதது பெருத்த ஏமாற்றம் அளிக்கும் ஒன்று என்பதோடு, பேசவேண்டியவற்றை விடுத்து, அவர் பேசிய மற்றவை எல்லாம், தமிழ்நாட்டின் வரலாற்றையும், அரசியல் நிகழ்வுகள் அறிந்த எவராலும் முற்றிலும் ஏற்கவே முடியாதவையாகும். முதலமைச்சரின் உரையும், அதில் அவர் வெளிப்படுத்திய பாவனைகளும், சட்டமன்றத்தின் மரபுக்கும், மாண்புக்கும் உரியவை அல்ல!

அந்த அவையில் இடம் பெற்றிருப்போர் எக் கட்சியின ராயினும், அவர்கள் மக்கள்

பிரதிநிதிகள் என்ற அடிப்படையில், அவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பும், மரியாதையும் அம் மக்களுக்கு வழங்கப்படுவதாகும். அதே போலவே, அவையில் பேசப்படாதவை குறித்தும், அவசியமற்றும், அவைக்குள் பேசுவதும், அவையில் இல்லாதோர் குறித்துப் பேசுவதும், பண்பற்ற சொற்களையும், பாவனைகளையும் பயன்படுத்தப்படுவது எல்லாம் பொதுவாகவே தவிர்க்கப்பட வேண்டியவை ஆகும்.

எந்தக் கேள்விகளுக்கும் பதில் அளிக்கவில்லை!

இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஒவ்வொரு நாளும் நடைபெற்றவை ஆரோக்கியமான விவாதங்கள் அல்ல என்பதே பொதுவானவர்களின் கருத்தாகும். எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய முதலமைச்சரும், அமைச்சர்களும் எந்த நேரத்திலும் ஆக்கப் பூர்வமான விவாதத்தில் பங்கேற்கவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். முதலமைச்சர் பெரும்பாலும் எந்தக் கேள்விகளுக்கும் பதில் அளிக்கவில்லை என்பதுடன், அவசியமற்று அமைச்சர்கள் பிரச்சினைகளைத் திசைதிருப்பிய போதெல்லாம் அதை அனுமதித்தது, மறைமுகமாக அதனை வரவேற்றது, ஊக்கப்படுத்தியது போன்றதே ஆகும்!

அது உரிமை மீறல் ஆகும்!

சட்டமன்ற நிகழ்வுகள் நேரலையில் ஒளிபரப்பப்படுகின்றன என்பதால், இன்றைய ஊடக உலகிற்கேற்ப, குறுங்காணொலிகளை உருவாக்குவதை மனதில் கொண்டே, தவறான வரலாறுகளையும், தகவல்களையும் இளைஞர்கள் மனதில் பதிய வைக்கும் வகையில் ஆளுங்கட்சியினரின் பேச்சுகள் அமைகின்றனவோ என்று சந்தேகம் தீவிரமாக எழுகிறது. அவற்றில் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுபவையும் சேர்த்துதான் சமூக ஊடகங்களில் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன என்னும் போது, அந்தச் சந்தேகம் மேலும் உறுதிப்படுகிறதே!

ஆனால், முதலமைச்சர் அவர்களின் உரை இவற்றுக் கெல்லாம் உச்சமாக அமைந்தது என்பது, தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தின் நிலையை நினைத்து நம்மைப் போன்ற வர்களைக் கவலையையும், வேதனையையும் கொள்ளச் செய்கிறது. விசாரணை என்பது நீதிமன்றத்தில் நடைபெற வேண்டியது (*Trial by Judiciary*); ஊடகங்களில் (*Trial by media*) அல்ல! அது சரியான முறையும் அல்ல!

அதிலும் குறிப்பாக, 'மிசா' காலத்துக் கொடுமைகளைக் குறித்துப் பேசியதும், அதற்கு முதலமைச்சர் காட்டிய உடல்மொழியும் எவராலும் ஒருபோதும் ஏற்கப்படவே முடியாதவை ஆகும். (அதற்கு உள்நோக்கமில்லை என்று வெளியில் வந்து சமூக ஊடகத்தில் எழுதினாலும், நேரலையில் பார்த்தவர்களுக்கு உண்மை புரியும்.)

ஜனநாயகமும், அடிப்படை உரிமைகளும் பறிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் இருந்த ஜனநாயக ரீதியிலான ஆட்சியைக் கலைத்துவிட்டு, உயர்ஜாதி அதிகாரிகள் நடத்திய காட்டாட்சிக் காலம் அது! எட்டுக்கு எட்டு இருட்டுக் கொட்டடியில் அடைக்கப்பட்டு, எதற்குக் கைது செய்யப்பட்டோம் என்று தெரியாது, விசாரணை என்ற ஒன்றே கிடையாது; சிறைக்கதவுகள் திறக்குமா, விடுதலை ஆவதற்கு வாய்ப்புண்டா? உயிருடன் திரும்புவோமா? என்றெல்லாம் எதுவும் அறியமுடியாத கொடுமை மிகுந்த அந்த நாட்களில், அதனினும் கொடுமையாக நடந்தது சிறைத் தாக்குதல்கள்; மனித உரிமை மீறல்கள்; சிறை அதிகாரிகளின் அருவருப்பான நடத்தைகள், ஆபாச வசவுகள் இவற்றையெல்லாம் அனுபவித்தவர்கள் நாங்கள்! (ஆதாரம்: ஜஸ்டிஸ் இஸ்மாயில் கமிஷன் அறிக்கை).

முதலமைச்சராக இருந்தவரின் மகன் என்ற ஒற்றைக் காரணத்துக்காகச் சிறையில் அடைக்கப்பட்ட இளைஞர் மு.க.ஸ்டாலினைத் தாக்கிச் சிறையில் தள்ளியபோது தாங்கிப் பிடித்த கரங்கள் என்னுடையவை! அவர் மீது நடத்தப்பட்ட கொடுந் தாக்குதலைத் தாங்கி, தன்னையே பலி கொடுத்தவர் முன்னாள் மேயர் சிட்டிபாபு மற்றும் சாத்தூர் பாலகிருஷ்ணன் ஆகியோர் ஆவர். அன்றைக்குப் பட்ட காயங்கள் 50 ஆண்டுகள் கழித்து, இன்றைக்கும் எத்தனை உடல் வேதனையைத் தருகின்றன என்பதை எங்களைப் போன்றவர்கள் அறிவோம்; அனுபவிக்கிறோம். நீதியரசர் மு.மு.இஸ்மாயில் ஆணையத்தின் அறிக்கையில் விரிவாக எல்லாம் பதிவாகியிருக்கின்றன. எமது வாழ்க்கைக் குறிப்புகள் உள்பட ஏராளமான ஆவணங்கள் இருக்கின்றன. ஆனால், இவற்றையெல்லாம் வெகு சாதாரணமாக ஆக்குவது போல, அவசர நிலைக் காலகட்டத்தை இயல்பாக்குவது (*Normalise*) போல அமைந்த முதலமைச்சரின் உரை நியாயமானதா? பாசிசம் என்ற ஆள்துரக்கி அரசியலைக் குறித்துப் பேசுவதை, 'பாசிசமா? பாயசமா?' என்று மலினப்படுத்த முயன்றதைப் போன்ற அறியாமையா? ஆணவமா? என்றே விவரம் தெரிந்தவர்கள் வினா எழுப்புவர்.

'சர்க்காரியா கமிஷன்' விசாரணை அறிக்கை!

ஆளும் வர்க்கத்தின் ஆள்தூக்கிச் சட்டத்திற்கு, ஜனநாயகப் படுகொலைக்கு அடங்க மறுத்ததன் காரணமாகத் தானே கலைஞர் ஆட்சி கலைக்கப்பட்டது? அதன் தொடர்ச்சியாக அவரை மிரட்டுவதற்குத் தானே 'சர்க்காரியா கமிஷன்' என்று கொண்டு வந்தார்கள். கலைஞரின் ஆட்சியைப்பற்றி ஆளுநரிடம் புகார் கொடுத்து, அந்தக் கமிஷன் அமைக்கக் காரணமானவரான எம்.ஜி.ஆர். அவர்களே, தன்னிடம் எந்த ஆதாரமும் இல்லை என்று பிறகு கைவிரித்துவிட வில்லையா? அந்த ஆணையத்தின் இறுதி விசாரணை அறிக்கையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அது நீதிமன்றத்தில் வழக்காக ஆனதா? தீர்ப்பு வழங்கப்பட்டதா? விவரமே தெரியாமல் ஒரு முதலமைச்சர் தகுதியில் உள்ளவர், அதுவும் அவையுள் பேசலாமா?

குற்றம் சாட்டப்படுவதாலேயே ஒருவர் "குற்றவாளி ஆகிவிடுவாரா?" கலைஞர் மீதோ, திமுக அமைச்சரவையில் இருந்தவர்கள் மீதோ குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, தண்டனை பெற்றிருக்கிறார்களா? தீர்ப்பு நீதிமன்றம் கூறியுள்ளதா? அந்த மானியக் கோரிக்கை பதிலுக்கும், முரசொலி மாறனுக்கும் என்ன சம்பந்தம்? மறைந்தவர்கள் குறித்தும், அவையில் இல்லாதவர்கள் மீதும், பதில் சொல்ல வாய்ப்பு இல்லாதவர்கள் மீதும், குற்றச் சாட்டுகளை அடுக்குவதற்கான அவையா அது? அதற்கான நேரமா காவல்துறை மானியக் கோரிக்கைக்கான பதிலுரை?

உரக்கப் பேச வேண்டிய அவசியம் என்ன?

"கடந்த நான்கு மாதமாக நடைபெற்று வரும், முழுமையான மெஜாரிட்டி இல்லாத (தி.வெ.க.) ஒரு ஆட்சிக் காலத்தில், எத்தனை எத்தனைக் கொலைகள், எத்தனை பாலியல் வன்கொடுமைகள், எத்தனை ஆணவப் படுகொலைகள்? தலைநகர் சென்னையிலேயே கடந்த வாரத்தில் ஆளுங்கட்சிப் பிரமுகரே கண்டம் துண்டமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டாரே! கோவையில் தொடர் கொலைகள் அரங்கேறி வருகின்றனவே! மகளிருக்குப் பாதுகாப்பில்லை என்று ஆளுங்கட்சி மகளிரே குற்றம் சாட்டுகிறார்களே! சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுக் கிடக்கிறதே!" என்று எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினால், அது குறித்து உரிய பதில்களை முன்வைக்காமல், திரைப்படக் காட்சி வசனம் போல, உச்சக் குரலில் உரக்கப் பேச வேண்டிய அவசியம் என்ன? திசை திருப்புவது அல்லாமல் அதற்கு வேறு நோக்கம் என்ன?

ஆட்சி அமைத்ததற்கு ஆதரவு அளித்துவரும் கூட்டணிக் கட்சிகளே கூட, இந்த அரசின் இத்தகைய செயல்பாடுகளை, முதலமைச்சரின் உரையைக் கண்டிக்கிறார்களே, புரிந்துகொண்டு திருத்திக் கொள்ள வேண்டாமா? இது முதல் முறை அல்லவே! கடந்த ஜூன் 23 அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான உரையிலும், இதே போல முதலமைச்சர் நடந்து கொண்டதையும் எல்லோரும் கண்டிக்க வில்லையா?

இதுவரை, பல சமயங்களில் அவைத் தலைவரின் நடவடிக்கைகள் சரியானவை போல தோற்றமளித்தது கூட, உண்மையானதல்லவோ என்ற சந்தேகம் எழுப்பும் வகையில் தானே கடந்த சில நாட்களாக அவரது போக்கு அமைந்துள்ளது ஏமாற்றமாகும். எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அனுமதித்துவிட்டு, அடுத்த சில நொடிகளில் மாற்றிக் கொண்டதெல்லாம் எதனால்? யாரால்? அழுத்தமா? என்ற கேள்விக்கு இடந்தரலாமா? அவர் பொது மனிதர் ஆகிவிட வில்லையா?

நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்?

யார் மீது தவறு என்றாலும் நடவடிக்கை எடுப்பதற்குத் தானே அரசு அதிகாரம் இருக்கிறது. அதை விடுத்து, வெறுமனே மிரட்டுவதால் என்ன பயன்? தவறு என்று தெரிந்தால் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்? மேசையில் கோப்பு இருக்கிறது என்று பூச்சாண்டி காட்டுவதா? சட்டம் தன் கடமையைச் செய்யட்டும் - நீதிமன்றமும், மக்கள் மன்றமும் 'மாண்பமை தீர்ப்பு' கூறட்டும்!

இது தனிப்பட்ட ஒருவரின் பேச்சு அல்ல; முதலமைச்சரின் பேச்சு, அதுவும் தமிழ்நாடு எப்படி அமைய வேண்டும் என்பதே நமது அக்கறை. அந்தப் பதவிக்கென்று உள்ள கவுரவமும், மாண்பும் குலையக் கூடாது, தமிழ்நாட்டுக்கென்று உள்ள ஜனநாயகப் பெருமை நிலைக்க வேண்டும் என்பதே பொதுவாழ்வில் நெடுங்காலத்தைக் கடந்தும் இன்றைக்கும் தமிழ்ச் சமுதாயத்துக்காகக் களத்தில் நிற்கும் எம்மைப் போன்றவர்களின் கவலையாகும்!

இதுவே கடைசியாக இருக்கட்டும் என்பது பொது ஒழுக்கமும், மரபும், மாண்பும் காப்பாற்றப்பட வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியின் வெளிப்பாடே என்பதாலேயே நாமும் சுட்டிக்காட்டுகிறோம்! நியாயமாக அவையில் வருத்தம் தெரிவிக்கவேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தியாகராயர் நகர் மேற்கு – கிழக்கு பகுதி

வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

கே.ஏழுமலை எம்.சி. – கோ.சு.மணி அறிக்கை!

சென்னை,செப்.10- சென்னை தென் மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு, கிழக்கு பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., - கோ.சு.மணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென் மேற்கு மாவட்டம் தியாகராய நகர் கிழக்கு மேற்கு பகுதி திமுக வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (10.09.26) மாலை 6 மணி அளவில் தியாகராய நகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் அலுவலகத்தில் தியாகராய நகர் கிழக்கு மேற்கு பகுதி திமுக வட்டச் செயலாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது. எனவே இக்கூட்டத்திற்கு வட்ட செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி தியாகராயநகர் பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி ஆகியோர் கேட்டுக் கொள்கிறார்கள்.

பொருள். சென்னை சிறையில் மிசா கொடுமைகளை அனுபவித்த கழகத் தலைவர் தியாகத்தை சட்டமன்றத்தில் தவறாக பேசிய விஜயை கண்டித்து வரும் 12ஆம் தேதி நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

போளூர் கே. கோவிந்தசாமி
செப்டம்பர் 10 (2011)

திருவண்ணாமலை மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவரான இவர், 1970 முதல் 1980 வரை பத்தாண்டுகள் போளூர் பேரூர்க் கழகச் செயலாளராகவும், 1977 முதல் 2011 வரையிலான 34 ஆண்டுகள் பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

இடைத்தேர்தல்

மயக்கத்தில்
இழைத்த மாபாதகத்திற்கு
பிராயச்சித்தம் தேடிடவும்

ஆளத்தெரியாத மக்குகளின்
தலையில்
ஓங்கிக்
குட்டு வைத்து திருத்திடவும்

வலிய வந்து கிடைத்திருக்கும்
தாராள வாய்ப்பாக தாராபுரத்தையும்

மகத்தான சந்தர்ப்பமாக மதுராந்தகத்தையும்
மக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

வாக்களிப்பீர்
உதயசூரியன்...

என்னநாஞ் சொல்றது

மருது. அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக்குழு
துணைத் தலைவர்